# புத்தாண்டு பிறந்தது

2

இடம் - மோகன் வீடு
பாத்திரங்கள் - மோகன், தங்கை வனிதா, அப்பா, அம்மா

**(கோயில் மணி ஒலிக்கிறது)**

**மோகன்** :- அப்பா கோயில் மணி ஒலிக்கிறது. புது வருடம் பிறந்து விட்டதா?

**அப்பா** :- இன்னமும் இல்லை. புண்ணிய காலம் பிறந்து விட்டது. அதனால் தான் மணி ஒலிக்கிறது.

**வனிதா** :- எப்போது அப்பா புது வருடம் பிறக்கும்?



**அப்பா** :- காலை 10.00 மணிக்குத்தான் புது வருடம் பிறக்கிறது. நேரம் ஆகிவிட்டது நான் போய் மருத்து நீர் வாங்கி வருகிறேன்.



இலவசப்பாடநூல் விநியோகத்திற்காக

**மோகன்** :- மருத்து நீரா? மருத்து நீர் என்றால் என்ன?

**அப்பா** :- அதோ, உங்கள் மாமா வருகிறார். அவரிடம் கேளுங்கள்

**மோகன் - வனிதா** :- இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள் மாமா.

**மாமா** :- உங்களுக்கும் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்.

**மோகன்** :- சித்திரைப் புத்தாண்டைப் பற்றிச் சொல்லுங்கள் மாமா.

**மாமா** :- என்ன சொல்ல வேண்டும்?

**வனிதா** :- அப்பா மருத்து நீர் வாங்கக் கோயிலுக்குச் செல்கிறார். மருத்து நீர் என்றால் என்ன?

**மாமா** :- தாழம் பூ, தாமரைப் பூ, மாதுளம் பூ முதலிய பூக்களையும் எலுமிச்சை, அறுகம்புல், கோசலம், கோமயம் போன்றவற்றையும் கொண்டு செய்வதே மருத்து நீர்.

**மோகன்** :- அதை நாம் தலையில் தேய்த்துக் குளிக்க வேண்டும் என அம்மா கூறினார். ஏன் மாமா?

**மாமா** :- மருத்து நீர் தேய்த்து நீராடினால் நாம் செய்த குற்றங்கள் நீங்கி விடும் என்பார்கள்.

**மோகன்** :- எமது புத்தாண்டில் வேறு ஏதும் விசேடங்கள் உள்ளனவா?



இலவசப்பாடநூல் விநியோகத்திற்காக

**மாமா** :- ஆம். ஏர் மங்களம் செய்தல், கைவிசேடம் ஆகியனவும் விசேடமானவைதான்.

**வனிதா** :- ஏர் மங்களமா? அது என்ன?

**மாமா** :- ஏர் என்றால் கலப்பை. கலப்பையிலே மாடுகளைப் பூட்டி நல்ல நாளான இன்று உழவுத் தொழிலை ஆரம்பிப்பார்கள். இதனைத் தான் ஏர் மங்களம் என்கிறார்கள்.

**மோகன்** :- கைவிசேடம் என்றால் என்ன?

**மாமா** :- எங்கள் வாழ்க்கையில் காசு மிக முக்கியமான பொருள். அதை வருடம் பிறந்து நல்ல நேரத்தில் பெரியவர் ஒருவரிடமிருந்து வாங்குவது வழக்கம். இதைத்தான் கைவிசேடம் என்பார்கள்

**அம்மா** :- மோகன், வனிதா வாருங்கள்!

**மாமா** :- அதோ உங்கள் அம்மா அழைக்கிறார்.

**மோகன்** :- நன்றி மாமா. இன்று நிறைய விடயங்களை அறிந்து கொண்டோம். போய் வருகிறோம் மாமா!

**மாமா** :- சரி போய்வாருங்கள் பிள்ளைகள்!



இலவசப்பாடநூல் விநியோகத்திற்காக

**பாடத்தில் வரும் சில சொற்களும் பொருளும்**

| | | |
|---|---|---|
| புது வருடம் | - | අලුත් අවුරුද්ද |
| புண்ணிய காலம் | - | පුණ්‍ය කාල |
| ஒலிக்கிறது | - | නාදවෙනවා. |
| மருந்து நீர் | - | ඖෂධ මිශ්‍රවූ වතුර |
| இனிய | - | රසවත් / සුභ / මිහිරි |
| குற்றங்கள் | - | වැරදි / පව් |
| தேய்த்து | - | ගෑම |
| கைவிசேடம் | - | ගණුදෙනුව |
| கலப்பை | - | නගුල |
| உழவுத்தொழில் | - | ගොවිතැන |
| தாழம் பூ | - | වැටකෙයියා මල |
| மாதுளம் பூ | - | දෙළුම් මල |
| ஏர் மங்களம் | - | වප් මගුල |
| கோமயம் | - | හවර / ගොම |
| கோசலம் | - | හව මූත්‍ර |

**கிரகித்தற் பயிற்சி**

**பின்வரும் வினாக்களுக்கு விடைதாருங்கள்.**

පහත සඳහන් ප්‍රශ්නවලට පිළිතුරු සපයන්න.

1. மருத்து நீரில் இடப்படும் பூக்கள் எவை?
2. கைவிசேடம் என்றால் என்ன?
3. மருத்து நீரைத் தலையில் தேய்த்துக் குளிப்பது ஏன்?
4. ஏர் மங்களம் என்றால் என்ன ?



இலவசப்பாடநூல் விநியோகத்திற்காக

## செயற்பாடு I

உரையாடலைப் பாத்திரமேற்றுக் குழுவாகச் சேர்ந்து வாசியுங்கள்.

## செயற்பாடு II

சித்திரைப் புத்தாண்டு தொடர்பான இந்துக்களின் சம்பிரதாயங்களைத் தேடி ஒப்படை ஒன்றினைத் தயாரியுங்கள்.

## இலக்கணம்

### வினாச்சொற்கள்

**உதாரணம்:- 01**

ஏன்?
எப்படி?
என்ன?
யார்?
எங்கே?
எப்போது?
எத்தனை?

- ஏன் பாடசாலை வரவில்லை?
- ஏன் சோறு சாப்பிடவில்லை?

- எப்படி சுகம்?
- ஊருக்கு எப்படி செல்ல வேண்டும்?

- என்ன வேண்டும்?
- உங்கள் பெயர் என்ன?

- இவர் யார்?
- நீங்கள் யார்?

- பாடசாலை எங்கே உள்ளது?
- மரக்கறிக் கடை எங்கே உள்ளது?



இலவசப்பாடநூல் விநியோகத்திற்காக

- எப்போது படிக்க வேண்டும்?
- எப்போது வர வேண்டும்?

- எத்தனை மணி?
- எத்தனை பழங்கள் வேண்டும்?

உதாரணம்:- 02

| | | |
|---|---|---|
| **அம்மா** | ➔ | **அம்மாவா?** |
| **அப்பா** | ➔ | **அப்பாவா?** |
| **புத்தகம்** | ➔ | **புத்தகமா?** |
| **பாடசாலை** | ➔ | **பாடசாலையா?** |
| **மரம்** | ➔ | **மரமா?** |
| **தலை** | ➔ | **தலையா?** |
| **பிறந்தது** | ➔ | **பிறந்ததா?** |
| **பேனை** | ➔ | **பேனையா?** |

## செயற்பாடு III

புத்தாண்டு பிறந்தது பாடத்தை அடிப்படையாக கொண்டு பின்வரும் சொற்களை வினாச் சொற்களாக மாற்றி எழுதுங்கள்.
පහත සඳහන් වචන ප්‍රශ්නවලට හරවන්න.

1. விட்டது
2. நீர்
3. வேண்டும்
4. இருக்கிறது
5. ஏர்மங்களம்

## செயற்பாடு IV

பின்வரும் சொற்களில் இருந்து வினாச் சொற்களைத் தெரிவு செய்து எழுதுங்கள்.
පහත සඳහන් වචනවලින් ප්‍රශ්නාර්ථ වචනය තෝරා ලියන්න.
என்ன, காலை, எது, மணி, ஏன், தங்கையா, எவை, தொடங்கிவிட்டது, புத்தாண்டு, யார், எப்படி, வந்ததா, வீடு, வனிதா, தொடங்கி விட்டதா, நல்லதா

## செயற்பாடு V

**பின்வரும் சொற்களை வினாச் சொற்களாக மாற்றி எழுதுங்கள்.**
පහත සඳහන් වචන ප්‍රශ්නාර්ථ වචනවලට හරවන්න.

1. மருந்து ------------------------------------------------------------------
2. பிறந்தது ------------------------------------------------------------------
3. பாய் ------------------------------------------------------------------
4. நாய் ------------------------------------------------------------------
5. அப்பா ------------------------------------------------------------------
6. பூ ------------------------------------------------------------------
7. மணி ------------------------------------------------------------------
8. கலப்பை ------------------------------------------------------------------
9. ஏர் ------------------------------------------------------------------
10. குற்றம் ------------------------------------------------------------------


இலவசப்பாடநூல் விநியோகத்திற்காக